முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 848

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.01.2022, திங்கட்கிழமை

1. கலியுகத்தின் மா தவராஜனே
கருணை நிறைந்த ஞானதேசிகனே
அழியாமை பெற்று வந்த அரங்கனே அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை நாட்டிடுவேன் அரங்க ஞானி சக்திநிலை கூட
(பிலவ வருடம் தை மாதம் 11ம் நாள், 24.01.2022 திங்கட்கிழமை)
2. கூடவே மாதவசி உன் கொள்கை வழியே
குவலயம் பெருமாற்றம் காணக்கூடும்
ஈடேற்றம் இந்த கலியுகம் தன்னில்
இறைமார்க்கமாம் உன் சன்மார்க்க வழியே நடந்தேற
3. தேற்றம் தந்து உன் தொண்டர் படைகளை
தெய்வீக பலம் கொண்ட ஞானவான்களாக்கி
ஆற்றல்கூடிட ஆறுமுகப்பெருமான் யானும்
அற்புதத்தை உலகமெங்கும் நடத்துவேன்
4. நடத்துகின்ற இந்த பெருமாற்றத்தை
ஞானிகள் கூட்டம் உன்னோடு இணைந்து
தடையற உயர் சேவையாற்றி வர
தவசி உன் தர்மமும் கொள்கையும்
5. கொள்கையுமே இந்த உலகை மாற்றம் செய்யும்
குறையின்றி ஞானலோகம் படைக்கும்
ஆற்றல்பட உன்னை உலகோர் தொடர்ந்து வர
அகிலத்தில் பெருமாற்றம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–